# 12

# துன்மார்க்கருக்குத் தண்டனை

*"உன் மனக்கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக்கொள்ளுகிறாயே. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப் பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார். சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிரகோபாக்கினை வரும். … பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும்" (ரோமர் 2:5-9).*

வாழ்வில் உள்ள மகிழ்வான விஷயங்கள் ஒருக்காலும் முடிவடையக் கூடாது என்று நாம் விரும்புகையில், [அதில் உள்ள] வேதனையானது உடனடியாக முடிய வேண்டும் என்று[ம்] விரும்புகின்றோம். மகிழ்வானதும் மகிழ்வுடன் அனுபவிக்கக் கூடியதுமானது தண்டனையாக இருப்பதில்லை. தவறு செய்தலுக்குக் கடிந்துகொள்ளப்படுதல் என்பது நமக்கு ஒப்புமை யில்லாத விஷயங்களை நாம் சகித்துக் கொள்ளும்படிக்குச் செய்வதன் மூலமே செயல்படுத்தப்பட முடியும். தேவன் தாம் செய்வேன் என்று சொல்லுகின்ற விஷயம் நமது மனதைப் புண்படுத்தும் என்றால், அப்படிப் பட்டது எதிர்பார்க்கப்பட வேண்டும். வேறு எவ்வாறு தேவன் பாவம் நிறைந்த மனிதனைத் தண்டிக்கக்கூடும்?

## தண்டனையானது எவ்விதமாயிருக்கும்?

நாம் ஏற்கனவே முடிவு செய்துள்ளபடி, துன்மார்க்கருக்குக் காலத்தின் முடிவில் தரப்படும் தண்டனை என்றென்றைக்குமானதாக இருக்கும். "நித்திய தண்டனை" எதைப் போன்று இருக்கும் என்று நம்மால் கற்பனை செய்து பார்க்க இயலாது (மத். 25:46).

**நிர்மூலமாகுதல்?**

எவரொருவரும் என்றென்றைக்கும் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்று சிலர் போதிக்கின்றனர். இவர்கள், "நித்திய தண்டனை" என்பது கீழ்ப்படியாதவர்கள் நிர்மூலமாக்கப்படுவார்கள் என்று அர்த்தப்படுத்து

*வதாக நம்புகின்றனர். இவர்கள், இருப்பதிலிருந்து கடந்து செல்லுதல் என்பது நித்தியமான தண்டனையாக உள்ளது என்று நம்புகின்றனர். இவர்கள் இந்த உபதேசத்தை, துன்மார்க்கர் அழிக்கப்படுவார்கள் அல்லது நித்திய அழிவை அடைவார்கள் என்று அறிவிக்கும் வசனங்களின் (மத். 10:28) அடிப்படையில் அமைக்கின்றனர்.*

*மத்தேயு 10:28ல் "அழிக்க" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள apollumi என்ற கிரேக்க வார்த்தை "மடிந்து" (மத். 8:25) மற்றும் "காணாமற் போய்" (லூக். 15:4, 6) என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மத்தேயு 9:17ல் இயேசு, திராட்சத்துருத்திகள் பாழாகும், ஆனால் நீர்மூலமாக்கப்படாது என்று மறைமுகமாகக் குறிப்பிட்டார்; காணாமற்போயிருந்த (apollumi) ஆடு, காசு மற்றும் குமாரன் ஆகியோர் கண்டுபிடிக்கப்பட்டனர் (லூக். 15:6, 9, 24). இயேசு, "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே" வந்தார் (லூக். 19:10), மற்றும் அவர், "தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்" என்று வாக்குத்தத்தம் செய்தார் (மத். 10:39). நீர்மூலமாக்கப்படுவது எதுவோ, அது கண்டுபிடிக்கப்படவோ அல்லது இரட்சிக்கப்படவோ முடியாது. முடிவான சந்தர்ப்பப் பொருள் ஒவ்வொன்றிலும் apollumi என்ற வார்த்தை ''காணாமற்போகுதல்,'' ''பாழாகுதல்,'' அல்லது ''அழிதல்'' என்றே அர்த்தப்படுகிறது, ஆனால் இது "நீர்மூலமாகுதல்" என்று அர்த்தப்படாது.*

*துன்மார்க்கர் முடிவேயிராமல் நித்தியத்திற்கும் தண்டிக்கப்படுவார்கள்: "அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்: ... எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது" (வெளி. 14:11). இதே விவரிப்பானது பிசாசு, மிருகம் மற்றும் கள்ளத்தீர்க்கதரிசி ஆகியோருக்குத் தரப்படும் தண்டனையைக் குறித்து வெளி. 20:10ல் தரப்பட்டுள்ளது, இவர்கள் முன்னதாக வெளி. 19:20ல் அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அக்கினிக்கடலில் தள்ளப்படுபவர்களை அது நிர்மூலமாக்கும் என்றால், முன்னதாக அக்கினிக்கடலுக்குள் தள்ளப் பட்டிருந்த மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும், ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு பிசாசு அதற்குள் தள்ளப்படுவதற்கு முன்பாகவே எரிந்து முடிந்திருக்க வேண்டும் (வெளி. 20:2, 3). அவர்கள் இன்னமும் அக்கினிக்கடலில் இருந்தார்கள் மற்றும் அவர்கள் தொடர்ந்து "இரவும் பகலும் சதாகாலங் களிலும்" அங்கு வாதிக்கப்படுவார்கள் (வெளி. 20:10).*

*புதிய உடன்படிக்கையின் கீழ் தேவனுடைய கிருபையைப் புறக்கணிப் பவர்கள், மோசேயின் நியாயப்பிரமாணத்தை மீறியவர்களுக்குத் தரப் பட்டதைக்காட்டிலும், அதிக மோசமான தண்டனைக்குப் பாத்திரராக இருப்பார்கள் (எபி. 10:29). மோசேயின் பிரமாணத்தை மீறியவர்களுக்குத் தரப்பட்ட தண்டனைகளில் மரணம் என்பதே மிகவும் மோசமானதாக இருந்ததால், மரணத்தை விட அதிகம் பயங்கரமாக உள்ள தண்டனை ஒன்று இருக்க வேண்டும். நரகம் என்பதே அந்தத் தண்டனையாக உள்ளது.*

**உண்மையான தண்டனை?**

*நரகம் (கிரேக்கம்: gehenna[1]) என்பது யாக்கோபு 3:6ல் உள்ள ஒரு குறிப்பு*

*தவிர, இயேசுவினால் மாத்திரம்*[2] *குறிப்பிடப்பட்ட ஒரு உண்மையான இடமாக உள்ளது.* KJV *வேதாகமம் hades மற்றும் gehenna என்ற வார்த்தைகளை "நரகம்" என்று மொழிபெயர்த்துள்ளதால், விஷயத்தைக் குழப்பியுள்ளது. மரித்தோர் இருக்கும் இடைநிலையான இடமான பாதாளம் (hades) மற்றும் துன்மார்க்கர் தண்டிக்கப்படும் இடமான நரகம் (gehenna) ஆகியவற்றிற்கு இடையில் உள்ள தெளிவான வேறுபாடு கவனிக்கப்பட வேண்டும்.*

*Gehenna என்ற வார்த்தை, முதலில் எருசலேமுக்குத் தென்பகுதியில் உள்ள ஒரு பாழான இடத்திற்கு வழங்கப்பட்டது, இது ஹின்னோமின் குமாரர்களுக்குச் சொந்தமான இடமாயிருந்தது. அந்த இடத்தில் விக்கிரகாராதனைக்காரர்கள் தங்கள் பிள்ளைகளை* [*உயிருடன்*] *எரித்த காரணத்தால் அது தேவனுக்கும் மனிதருக்கும் அருவருப்பும் அருக்களிப்பும் மிகுந்த இடமாக இருந்தது.*[3] *இவ்விதமாக இது, இயேசுவின் நாட்களில் எருசலேமின் குப்பைகளைக் கொட்டும் இடமாக இருந்தது. இது நாற்றம் உள்ள, புழுக்கள் மொய்த்த, தொடர்ந்து எரியும் நெருப்புக்களால் புகை எழும்புகின்ற இடமாக இருந்தது. Gehenna என்ற வார்த்தை, துன்மார்க் கருக்குத் தண்டனையளிக்கும் இடமாக இயேசுவினால் பொருத்தமான விவரிப்பாகப் பயன்படுத்தப்பட்டது.*

Gehenna*வின் அக்கினியை அக்கினிச் சூளை என்று இயேசு மறைமுக மாகக் குறிப்பிட்டார் (மத். 13:42, 50). இந்த அக்கினி நித்தியமானதாக, அணைக்கப்பட முடியாததாக இருந்தது (மத். 3:12; 18:8; 25:41; மாற். 9:48*[4]*). மேலும் அவர், இவ்விடத்தில் "புழு" சாகாது என்றும் கூறினார். அக்கினியும் புழுக்களும் பிணங்களைப் பட்சிக்கும் என்றால், இனியும் பட்சிப்பதற்கு எதுவுமிராதபோது அக்கினி அவிந்துபோகும், புழுக்கள் இறந்து போகும். அக்கினியும் புழுக்களும் நேர்ப்பொருளானவையாய் இருக்கும் என்று இயேசு நோக்கங் கொள்ளாதிருந்தாலும், இந்தச் சொற்றொடர்களை அவர், தண்டனையின் முடிவற்ற இயல்பைச் சுட்டிக்காண்பிக்கும் வகையில் பயன்படுத்தினார்.*

*இந்த அக்கினி என்பது நேர்ப்பொருளானதாய் இல்லாதிருந்தால், இயேசு ''அக்கினி'' என்ற வார்த்தையைத் திரும்பத் திரும்பப் பயன் படுத்தியது ஏன்? இதற்கு மறுபுறத்தில், ஆத்துமாக்களுக்குக் கிடைக்கவிருக் கும் தண்டனையை உலகம் சார்ந்த சொற்றொடர்களில் தவிர வேறு எவ்வகையில் நாம் புரிந்துகொள்ளும் வண்ணம் அவர் நமக்கு விவரிக்கக்கூடும்? ஒருவேளை பரலோகத்தின் வனப்பை விவரிப்பதற்கு உலகம் சார்ந்த சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது போல் இதுவும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். நரகத்தின் பயங்கரத்தைப் பற்றி நாம் புரிந்துகொள்ள உதவுவதற்கு இயேசு உலகம் சார்ந்த சொற்றொடர் களைப் பயன்படுத்தி இருக்க வேண்டும்.*

*நரகத்தில் அனுபவிக்கப்படும் தண்டனையின் வகை என்னவாக இருக்கும்? கீழ்ப்படியாதவர்கள் எவற்றை எதிர்பார்க்க முடியும்?*

*(1) நரகத்திற்கு அனுப்பப்படுபவர்கள் "அகன்று போங்கள்" என்று கூறப்படுவார்கள் (மத். 7:23; 25:41; லூக். 13:27ஐக் காணவும்). அவர்கள்*

தேவனை விட்டுப் பிரிக்கப்படுவார்கள்.

(2) நரகத்தில் இருப்பவர்கள் தேவனுடைய சந்நிதானத்திற்குப் புறம்பே தண்டிக்கப்படுவார்கள் (2 தெச. 1:10). இது அவர்களைத் தேவன் காணவோ, கேட்கவோ அல்லது உதவவோ மாட்டார் என்று சுட்டிக்காண்பிக்கலாம்.

(3) பிசாசும் அவனது தூதர்களும் மற்றும் எக்காலத்திலும் வாழ்ந்திருந்தவர்களில் துன்மார்க்கரான ஒவ்வொரு நபரும் நரகத்தில் இருப்பார்கள் (மத். 25:41).

(4) நரகம் என்பது அக்கினி மற்றும் கந்தகத்தினால் வாதிக்கப்படும் இடமாக உள்ளது (வெளி. 14:10; 20:10; 21:8 ஆகிய வசனங்களைக் காணவும்).

(5) நரகத்திலிருப்பவர்கள் தொடர்ந்து அழிக்கப்பட்டுக் கொண்டிருப்பார்கள் (2 தெச. 1:10).

(6) அவர்கள் தேவனுடைய நித்திய ராஜ்யத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் (1 கொரி. 6:9; கலா. 5:21).

(7) அவர்கள் தேவகோபத்தினால் வாதிக்கப்படுவார்கள் (மத். 3:7; ரோமர் 2:5; 5:9; எபே. 5:6; கொலோ. 3:6ஐக் காணவும்). அது கலப்பில்லாமல் வார்க்கப்படும் (வெளி. 14:10).

(8) அவர்கள் புறம்பான, காரிருளில் இருப்பார்கள் (மத். 8:12; 22:13; 25:30; 2 பேது. 2:17; யூதா 13ஐக் காணவும்).

(9) அவர்கள் ஆக்கினையைப் பெறுவார்கள் (மாற். 16:16; யோவா. 5:29; 2 தெச. 2:12; 2 பேது. 2:3).

(10) அவர்கள் மோசம் போக்கப்படும் நிலையில் இருப்பார்கள் (கலா. 6:8).

(11) அவர்கள் தேவனுடைய பழிவாங்குதலினால் உபத்திரவப்படுவார்கள் (ரோமர் 12:19).

தண்டிக்கப்படுபவர்களின் மறுசெயல் விவரிக்க இயலாததாக இருக்கிறது: அவர்கள் உபத்திரவம் மற்றும் வேதனை ஆகியவற்றினால் உபாதைப்படுவார்கள் (ரோமர் 2:9). அவர்கள் அழுதுகொண்டும் பற்களைக் கடித்துக்கொண்டும் இருப்பார்கள் என்று இயேசு கூறினார், இது வலிவார்ந்த வேதனையின் விவரிப்பாக உள்ளது (மத். 8:12; 13:42, 50; 22:13; 24:51; 25:30; லூக். 13:28).

நரகத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளவை யாவும் பயங்கரமான அளவுக்கு மோசமானதாக உள்ளது. அதைப் பற்றி நல்லது எதுவுமே கூறப்படவில்லை. அங்கு செல்லுபவர்கள், வாழ்ந்திருந்தவர்களில் பொல்லாங்கான ஒவ்வொரு நபருடனும், பிசாசுடனும் அவனது தூதர்களுடனும் இணைவு கொண்டிருப்பார்கள் (மத். 25:41)! அவர்கள் தேவனுடனோ, நீதிமான்களுடனோ ஒருக்காலும் இருக்க மாட்டார்கள். அவர்கள் என்றென்றைக்கும் இருளில் வாழ்வார்கள். ஒளியாக உள்ள தேவன் அங்கிருக்க மாட்டார். சூரியனும், வானமண்டலங்களும், நட்சத்திரங்களும் அண்டத்தின் வெளிச்சம் ஒவ்வொன்றும் அங்கிராது. தேவனும் இந்த வெளிச்சங்களும் இல்லையேல், இருள் மாத்திரமே இருக்கிறது.

# தண்டனையில் [பல்வேறு] அளவுகள் இருக்குமா?

தேவனுடைய தண்டனை கடுமையானதாக இருக்கும் என்பதால் நாம், “தண்டனையில் [பல்வேறு] அளவுகள் இருக்குமா?” என்று கேட்கலாம். ‘‘நல்ல வாழ்வை’’ வாழ்ந்து ஆனால் சுவிசேஷத்தைப் புறக்கணித்த ஒரு நபரைத் தேவன், யாரையேனும் கொலை செய்து ஒழுக்கமற்ற வாழ்வு வாழ்ந்த ஒரு நபரைப் போன்றே தண்டிப்பாரா? நீதியுள்ள ஒரு தேவன் இதைச் செய்வாரா? மனிதப் பகுத்தறிவானது, “இல்லை!” என்று அலறலாம் ஆனால் தேவன் எவ்வாறு செயல்படுவார் என்பதை அது நிரூபிப்பதில்லை.

சில வேதவசனங்கள், தண்டனையில் பல்வேறு அளவுகள் இருக்கும் என்று சுட்டிக்காண்பிக்கின்றன. மிருகத்தை வணங்கியவர்கள், “தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடி(ப்பார்கள்)” (வெளி. 14:10) என்ற கூற்று, தேவனுடைய கோபத்தின் முழு உக்கிரத்தை எல்லாரும் குடிக்கமாட்டார்கள் என்று சுட்டிக்காண்பிக்கிறது. இவ்வசனத்தில், மிருகத்தை வணங்கியவர்கள் மாத்திரம் தேவனுடைய உக்கிரமாகிய மதுவைக் குடிப்பார்கள் என்று கூறப்படுகிறது.

யூதர்களின் மாய்மாலமான மதத் தலைவர்களைப் பற்றி இயேசு, ‘‘விதவைகளின் வீடுகளைப் பட்சித்து, பார்வைக்கு நீண்ட ஜெபம் பண்ணுகிற வேதபாரகரைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்: அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள்’’ (மாற். 12:40; மத். 23:14; லூக். 20:47ஐயும் காணவும்) என்று சொன்னார். “அதிக ஆக்கினை’’ என்பது மிகவும் மோசமான தண்டனையை அர்த்தப்படுத்துவதில்லை என்றால், பின்பு அது வேறு எதை அர்த்தப்படுத்துகிறது?

லூக்கா 12ன் உவமையில், சக ஊழியர்களை அடித்து, மதுபானம் பண்ணிக் கொண்டிருந்த ஒரு வேலைக்காரனைக் கண்ட எஜமானைப் பற்றி இயேசு கூறினார். இந்த அடிமை அவிசுவாசிகளுடன் பங்கடைவான் என்று குறிப்பிட்ட பின்பு, அவர் பின்வருமாறு தொடர்ந்து கூறினார்:

> தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான். அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ, சில அடிகள் அடிக்கப்படுவான். எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும், மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள் (வ. 47, 48).

இந்த வசனப்பகுதியில் இயேசு, தண்டனையின் [பல்வேறு] அளவுகளைப் பற்றிப் போதித்தார். இந்தப் போதனை நரகத்தில் நித்திய தண்டனைக்கு நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமா? அப்படி என்றால், தண்டனையில் [பல்வேறு] அளவுகள் இருக்கும்.

## *நரகத்திற்குச் செல்பவர்கள் யார்?*

*யாரெல்லாம் தண்டிக்கப்படுவார்கள் என்று நமக்குக் கூறப்பட்டது. அவர்கள் கடினத்தன்மையும் மனந்திரும்பாமையும் உள்ள இருதயங் கொண்டு, "சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்கள்" என்று பவுல் விவரித்தார் (ரோமர் 2:5, 8, 9). மேலும் அவர்களில், "தேவனை அறியாதவர்களும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களும்" (2 தெச. 1:8) உள்ளடங்குவார்கள் என்றும் அவர் எழுதினார். பரலோகத்திற்குச் செல்லாத மக்களின் பட்டியலை பவுல் கொடுத்தார், இது அவர்கள் நரகத்திற்குச் செல்லுவார்கள் என்று அர்த்தப்படுகிறது (1 கொரி. 6:9; கலா. 5:21; எபே. 5:5ஐக் காணவும்). அவர்கள் வாழ்ந்த வாழ்வின் காரணமாக, நரகம் என்பதே அவர்கள் நித்தியமாக வாசம்பண்ணும் இடமாயிருக்கும்.*

*புதிய ஏற்பாடு பயத்தைப் பற்றிப் பேசுவதில் வியப்பு எதுவும் இல்லை. பவுல், "ஆகையால் கர்த்தருக்குப் பயப்படத்தக்கதென்று அறிந்து, மனுஷருக்குப் புத்தி சொல்லுகிறோம்" என்று எழுதினார் (2 கொரி. 5:11). இதே கருத்து ஓட்டத்தில் பேதுரு, "அன்றியும் பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியையின்படி நியாயத்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்து கொள்ளுங்கள்" என்று எழுதினார் (1 பேது. 1:17). இயேசு, "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம், ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" என்று கூறினார் (மத். 10:28). பவுல், "ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும் பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" என்றும் எழுதினார் (பிலி. 2:12).*

*"பூரண[5] அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" (1 யோவா. 4:18), மற்றும் பூரண அன்பு நம்மைக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாகக் காத்துக்கொள்ளும் (யோவா. 14:15, 21; 1 யோவா. 5:3). நாம் தேவனிடத்தில் அன்பும் பயமும் கொண்ட ஒரு எண்ணப்போக்கை வளர்த்துக்கொள்ள வேண்டும். தேவன் மீதான நமது அன்பு நம்மை அவருக்கு ஊழியம் செய்வதற்காக அவருக்கு அண்மையில் இழுத்துக் கொள்வதாக இருக்க வேண்டும், மற்றும் தேவன் மீது நாம் கொண்டுள்ள பயமானது நாம் அவரது சித்தத்தின்படி செய்யப் போதுமான அளவுக்கு மதிக்கும்படி நம்மைத் தூண்ட வேண்டும் (1 பேது. 1:17).*

## *முடிவுரை*

*இங்கு உரைக்கப்பட்ட யாவையும், நாம் நரகத்திற்குச் செல்ல விரும்பாதிருக்கும்படி நம்மை இணங்க வைக்கப் போதுமானவைகளாய்*

இருக்க வேண்டும். நரகம் என்பது நமக்காக அல்ல, ஆனால் பிசாசுக்கும் அவனது தூதர்களுக்கும் வடிவமைக்கப்பட்டதாக உள்ளது. உலகத்தின் வரலாறு நெடுகிலும் பிசாசானவன் ஏற்படுத்திய தொந்தரவுகளின் காரணமாக, அவன் தேவனால் வடிவமைக்கப்பட்ட உக்கிரமான நரகத்தில் என்றென்றைக்கும் இருக்கப் பாத்திரனாய் உள்ளான். இருப்பினும், நாம் இதைச் சொல்வோம் என்றால், தேவனுக்குக் கீழ்ப்படியாமல் பிசாசைப் பின்பற்றுகின்றவர்கள் தங்கள் பாவங்களுக்கு இலேசான கடிந்து கொள்ளுதலைப் பார்க்கிலும் அதிகமானவற்றிற்குப் பாத்திரராய் இருக்கின்றனர் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும்.

பரலோகத்தைச் சென்றடைதல் என்பதும், நரகத்தின் தண்டனையில் இருந்து தப்பித்தல் என்பதும் நமது மாபெரும் இலக்காக இருக்க வேண்டும். பரலோகத்தில் மிகவும் தாழ்ந்த இடம் என்று ஒன்றிருக்குமானால், நித்தியத்திற்கும் இருக்கும்படிக்கு அந்த இடமே, நரகத்தில் மிகச் சிறந்த இடம் என்று ஒன்று இருந்தால், அந்த மிகச் சிறந்த இடத்தைக்காட்டிலும் அதிக விருப்பத்துடன் தேர்ந்துகொள்ளப்பட வேண்டும். நாம் எவ்வாறு வாழவேண்டும் என்று தேவன் விரும்புகின்றாரோ, அவ்வாறு வாழ்வதன் மூலமும் மற்றவர்கள் பரலோகம் செல்ல ஆயத்தம் செய்து கொள்ள நாம் அவர்களுக்கு உதவுவதன் மூலமும் நாம் நரகத்தின் பயங்கரங்களைத் தவிர்க்க முடியும்.

---

குறிப்புகள்

[1]Gehenna என்பது, “பள்ளத்தாக்கு” என்று அர்த்தப்படுகிற ge என்ற வார்த்தையையும், அந்தப் பள்ளத்தாக்கின் Hinnom என்ற உரிமையாளரைக் குறிக்கும் வார்த்தையையும் இணைத்துப் பெறப்பட்ட ஒரு எபிரெயச் சொல்லின் கிரேக்க ஒலியாக்கமாக உள்ளது. [2]மத். 5:22, 29, 30; 10:28; 18:9; 23:15, 33; மாற். 9:43, 45, 47; லூக். 12:5; யாக். 3:6 ஆகிய வசனங்களைக் காணவும். [3]2 இரா. 23:10; 2 நாளா. 28:3; 33:6; எரே. 7:31, 32; 19:6 ஆகிய வசனங்களைக் காணவும். [4]மாற். 9:43; லூக். 3:17 ஆகிய வசனங்களைக் காணவும். [5]“பூரண” என்று மொழிபெயர்க்கப்பட்ட, telios என்ற கிரேக்க வார்த்தை, “பக்குவம்” என்று அர்த்தப்படுகிறது.